பொது நிர்வாக சுற்றறிக்கை : 08/2023

எனது இலக்கம் : MPA/IAD/ADM/GA19/OTHER
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண
சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2023.05.14

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் மற்றும் அரசுக்குச் சொந்தமான கம்பெனிகளின் தலைவர்களுக்கு

**<u>தேசிய எரிசக்தி ஆற்றல்கள், மூலோபாயங்கள் மற்றும் பாதை வரைபடங்கள் குறித்த அமைச்சரவை துணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல்</u>**

எரிசக்தி துறையை பேண்தகு அபிவிருத்தியை நோக்கி முன்னெடுத்துச் செல்லும் நோக்குடன் பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகளையும் மூலோபாயங்களையும் கண்டறிந்து, இது தொடர்பான பரிந்துரைகளை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கவும், அப்பரிந்துரைகளின் அடிப்படையில் அமைச்சரவையினால் எட்டப்படும் முடிவுகளை விரைவாக செயற்படுத்தவும் தேவையான வழிகாட்டுதல்களையும் தொடர் நடவடிக்கைகளையும் வழங்க கௌரவ பிரதமரின் தலைமையின் கீழ் 'அடுத்துவரும் தசாப்தத்திற்கான தேசிய எரிசக்தி ஆற்றல்கள், மூலோபாயங்கள் மற்றும் பாதை வரைபடங்கள் குறித்த அமைச்சரவை துணைக் குழுவினால்' தயாரிக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கியுள்ள பரிந்துரையின் இலக்கம் 02 இனை நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரம் இலக்கம் අමප/22/2048/602/019 மற்றும் 2023.01.19 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

02. அமைச்சரவை துணைக் குழு அறிக்கையின் பரிந்துரை இலக்கம் (1) இன் படி, 2019 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேசிய எரிசக்தி கொள்கை மற்றும் மூலோபாயத்தின் அதிகாரப்பூர்வ ஆவணத்தை காலத்தின் தேவைக்கேற்ப மதிப்பாய்வு செய்து புதுப்பிப்பதற்கான உத்தரவுகள் மற்றும் அறிவுறுத்தல்களை உள்ளடக்கிய சுற்றறிக்கையை நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளர் வெளியிட்டார்.

*03.* அத்தோடு, இந்த விடயத்துடன் தொடர்புடையதாக 2022.03.07 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானத்தின் படி வெளியிடப்பட்ட 2022.03.08 ஆந் திகதிய பொ.நி.சு. *04/2022* இன் பால் தங்களது கவனத்தை ஈர்க்கிறேன். அச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் எரிபொருள் பாவனை உரிய வகையில் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை கண்டறிய ஒவ்வொரு நிறுவனத்திற்கும் எரிசக்தி முகாமையாளராக பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்.

04. பொது நிர்வாக சுற்றறிக்கை 04/2022 இன் மூலம் நடைமுறைப்படுத்த உத்தரவிடப்பட்ட முன்மொழிவுகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதனை இந்த அமைச்சினால் ஒழுங்குபடுத்தப்படுவதோடு, அதற்காக 2022.06.30 முதல் 2022.12.31 ஆந் திகதி வரையான 06 மாதங்களுக்கு நீர், மின்சாரம், எரிபொருள் மற்றும் தொலைபேசிப் பயன்பாடு பற்றிய தரவு அறிக்கையை (மாதாந்த அலகு எண்ணிக்கை) 2023.03.31 ஆந் திகதிக்கு முன்னர் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். (அமைச்சினதும் அதன் கீழுள்ள அனைத்து திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் தகவல்களையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.) அதன் பின்னர், மேற்கூறப்பட்டவாறே மின்சாரம், நீர், எரிபொருள் மற்றும் தொலைபேசி ஆகியவற்றின் மாதாந்த அலகு எண்ணிக்கையை உள்ளடக்கிய தகவல் அறிக்கையை காலாண்டு ரீதியாக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

05. தேசிய எரிசக்திக் கொள்ளை மற்றும் மூலோபாய உத்தியோகபூர்வ ஆவணம், அவற்றினை புதுப்பிக்கும் வகையில் தங்களது அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் சேர்க்கப்பட்ட திருத்தங்கள் மற்றும் அமைச்சரவைத் துணைக்குழு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு எரிசக்தித் துறையுடன் தொடர்புடையதாக தங்களது அமைச்சினால் நடைமுறைப்படுத்த கண்டறியப்பட்டுள்ள சகல செயற்பாடுகள் மற்றும் பணிகளையும் உள்ளடக்கி 2023 ஆம் ஆண்டின் அடுத்துவரும் 06 மாதங்களுக்கு குறுகிய காலத் திட்டம் (2023 ஜூன் - 2023 திசெம்பர்), நடுத்தர காலத் திட்டம் (2023-2025) மற்றும் நீண்ட காலத்திட்டம் (2023-2030) என்றவாறு மூலோபாய முகாமைத்துவத் திட்டங்களை பேண்தகு அபிவிருத்தி இலக்குகளுக்கு இணங்கி தயாரிக்குமாறு இத்தால் அறிவுறுத்துகிறேன்.

06. இதன்படி, முதற்கட்டமாக, 2023 ஆம் ஆண்டின் அடுத்த *06* மாதங்களுக்கான குறுகிய கால மூலோபாய முகாமைத்துவத் திட்டங்களை தங்களது அமைச்சுக்கும் அதன் கீழுள்ள சகல திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களுக்கும் தனித்தனியாக தயாரிக்கப்படல் வேண்டும். அந்த குறுகிய கால மூலோபாய திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் தங்கள் அமைச்சு தெளிவான இலக்கினைக் கொண்ட பெறுபேறுகளை அடையும் என உறுதியாக எதிர்பார்க்கிறேன். அவ்வாறே, ஒவ்வொரு நிறுவனத்தினதும் குறுகிய கால மூலோபாயத் திட்டங்களை இணைத்து, தங்களது அமைச்சின் எரிசக்தி துறையில் நடுத்தர கால மற்றும் நீண்ட மூலோபாய முகாமைத்துவத் திட்டங்களை இணைப்பில் காட்டப்பட்டுள்ள படிவத்தின்படி தயாரித்து, பிரதமரின் செயலாளருக்கும், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளருக்கும் பிரதியொன்றுடன் எனக்கும் *2023.05.31* ஆந் திகதிக்கு முன்னர் அனுப்புமாறு தயவுடன் அறியத்தருகிறேன்.

07. இந்த மூலோபாயங்களை வகுக்கும் போது, சூரிய சக்தி போன்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றல்களின் பயன்பாடு மற்றும் எரிசக்தியை குறைவாக பயன்படுத்தும் உபகரணங்களை பயன்படுத்துவதன் பால் அதிக கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

08. இது குறித்த மேலதிக தகவல்கள் தேவைப்படின் இந்த அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ( உள்ளக நிர்வாகம்) திரு. சீ.பி.யூ. ஹெட்டி ஆரச்சி அவர்களுடன் தொடர்புகொள்ள முடியும்.

09. இந்த சுற்றறிக்கை வெளியிடப்படுவது பொதுத் திறைசேரி மற்றும் பிரதமர் அலுவலகத்தின் இணக்கப்பட்டுடன் ஆகும்.

ஒப்பம்./ கே.டீ.என். ரஞ்சித் அசோக
செயலாளர்
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி இலக்கம் :- 011-2696478
தொலைநகல் இலக்கம் :- 011-2692158
மின்னஞ்சல் முகவரி :- ade-iii@pubad.gov.lk

**இணைப்பு**

……………………………………………………………………………………………………අමාත්‍යාංශය

**Short - term (For remaining 09 months in 2023) Strategic Management Plan for Energy Sector**
බලශක්ති ක්ෂේත්‍රය සඳහා කෙටිකාලීන (ඉදිරි මාස 09 – 2023) උපායමාර්ගික කළමනාකරණ සැලසුම

| # | Ministry, Department or State-Owned Institution අමාත්‍යාංශය, දෙපාර්තමේන්තුව හෝ ව්‍යවස්ථාපිත ආයතනය (1) | Goal පරමාර්ථය (2) | Strategy ක්‍රමවේදය (3) | Programme or Project or Activity වැඩසටහන හෝ ව්‍යාපෘතිය හෝ ක්‍රියාකාරකම (4) | Results of Programme or Project or Activity වැඩසටහන හෝ ව්‍යාපෘතිය හෝ ක්‍රියාකාරකමේ අපේක්ෂිත ප්‍රතිඵල (Output, Outcome, Impact) (5) | Responsibility වගකීම (6) | Duration කාලරාමුව (7) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Q - 2 | Q - 3 | Q - 4 |
| 1 | | | | | | | | | |
| 2 | | | | | | | | | |

……………………………………………………………………………………………………අමාත්‍යාංශය

**Mid- term (2023 - 2025) Strategic Management Plan for Energy Sector**
බලශක්ති ක්ෂේත්‍රය සඳහා මධ්‍යකාලීන (2023 – 2025) උපායමාර්ගික කළමනාකරණ සැලසුම

| # | Ministry, Department or State-Owned Institution අමාත්‍යාංශය, දෙපාර්තමේන්තුව හෝ ව්‍යවස්ථාපිත ආයතනය (1) | Goal පරමාර්ථය (2) | Strategy ක්‍රමවේදය (3) | Programme or Project or Activity වැඩසටහන හෝ ව්‍යාපෘතිය හෝ ක්‍රියාකාරකම (4) | Results of Programme or Project or Activity වැඩසටහන හෝ ව්‍යාපෘතිය හෝ ක්‍රියාකාරකමේ අපේක්ෂිත ප්‍රතිඵල (Output, Outcome, Impact) (5) | Responsibility වගකීම (6) | Duration කාලරාමුව (7) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 2023 | 2024 | 2025 |
| 1 | | | | | | | | | |
| 2 | | | | | | | | | |

……………………………………………………………………………………………………අමාත්‍යාංශය

**Long-term (2023 – 2030 in line with the Sustainable Development Goals) Strategic Management Plan for Energy Sector**
බලශක්ති ක්ෂේත්‍රය සඳහා දීර්ඝකාලීන (2023 – 2030 තිරසර සංවර්ධන අරමුණුවලට අනුකූලව) උපායමාර්ගික කළමනාකරණ සැලසුම

| # | Ministry, Department or State-Owned Institution අමාත්‍යාංශය, දෙපාර්තමේන්තුව හෝ ව්‍යවස්ථාපිත ආයතනය (1) | Goal පරමාර්ථය (2) | Strategy ක්‍රමවේදය (3) | Programme or Project or Activity වැඩසටහන හෝ ව්‍යාපෘතිය හෝ ක්‍රියාකාරකම (4) | Results of Programme or Project or Activity වැඩසටහන හෝ ව්‍යාපෘතිය හෝ ක්‍රියාකාරකමේ අපේක්ෂිත ප්‍රතිඵල (Output, Outcome, Impact) (5) | Responsibility වගකීම (6) | Duration කාලරාමුව (7) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 2023 | 2024 | 2025 | 2026 | 2027 | 2028 | 2029 | 2030 |
| 1 | | | | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | | | | |